# இயல் 6.3 - விகிதம் மற்றும் விகித சமம்

பயிற்சி எண் :: 6.3.3.3.D

விகிதம் - சமான விகிதங்கள் - த.நா.அ.பு - பயிற்சி 3.3.9-11

## விகிதம் - சமான விகிதங்கள் - த.நா.அ.பு - பயிற்சி 3.3.9-11

9. ஒரு வினாடி வினா போட்டியில் கார்முகிலன் மற்றும் கவிதா வழங்கிய சரியான விடைகளின் எண்ணிக்கையின் விகிதம் 10 : 11. அப்போட்டியில் அவர்கள் மொத்தமாக 84 புள்ளிகள் பெற்றனர். எனில், கவிதா பெற்ற புள்ளிகள் எத்தனை?

கார்முகிலன் மற்றும் கவிதா வழங்கிய சரியான விடைகளின் எண்ணிக்கையின் விகிதம் $\Rightarrow$ 10 : 11

அவர்கள் இருவரும் வழங்கிய சரியான விடைகளின் மொத்த எண்ணிக்கை = 10 + 11 = 21

அவர்கள் பெற்ற மொத்தப் புள்ளிகள் = 84

ஒரு சரியான விடைக்கு கிடைத்த புள்ளிகள் = $\frac{84}{21}$

$= \frac{\cancel{84}^{12}}{\cancel{21}_{3}}$ [ 7- ஆல் வகுக்க ]

$= \frac{12}{3}$

$= \frac{\cancel{12}^{4}}{\cancel{3}_{1}}$ [ 3- ஆல் வகுக்க ]

= **4**

∴ கவிதா வழங்கிய சரியான விடைகளுக்குக் கிடைத்த புள்ளிகளின் எண்ணிக்கை = 4 × 11 = **44**

> கவிதா பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை = 44

10. கார்மேகன் 9 ஓவர்களில் 54 ஓட்டங்களையும் ஆசிஃப் 11 ஓவர்களில் 77 ஓட்டங்களையும் எடுத்தார்கள் எனில் யாருடைய ஓட்ட விகிதம் சிறப்பானது? (ஓட்ட விகிதம் = ஓட்டம் ÷ ஓவர்)

|  | கார்மேகன் | ஆசிஃப் |
|---|---|---|
| ஓட்டம் | 54 | 77 |
| ஓவர் | 9 | 11 |

ஓட்ட விகிதம் = $\frac{\text{ஓட்டம்}}{\text{ஓவர்}}$

கார்மேகனின் ஓட்ட விகிதம் = $\frac{54}{9}$

$= \frac{\cancel{54}^{6}}{\cancel{9}_{1}}$ [9-ஆல் வகுக்க]

= **6**

ஆசிஃபின் ஓட்ட விகிதம் = $\frac{77}{11}$

$= \frac{\cancel{77}^{7}}{\cancel{11}_{1}}$ [11-ஆல் வகுக்க]

= **7**

> ஆசிஃபின் ஓட்ட விகிதம் 7. அது, 6-ஐ விட அதிகம் ஆதலால், ஆசிஃபின் ஓட்ட விகிதமே சிறப்பானது.

11. உன் நண்பன் 5 ஆப்பிள்களை ₹70 இக்கும், நீ 6 ஆப்பிள்களை ₹90 இக்கும் வாங்கினால், யார் வாங்கியது சிறப்பு?

நண்பன் வாங்கிய ஆப்பிள்களின் எண்ணிக்கை = 5

அவற்றின் விலை = ₹70

நண்பன் வாங்கிய ஒரு ஆப்பிளின் விலை = $\frac{70}{5}$

$= \frac{\cancel{70}^{14}}{\cancel{5}_{1}}$ [ 5 - ஆல் வகுக்க ]

= **₹14**

நான் வாங்கிய ஆப்பிள்களின் எண்ணிக்கை = 6

அவற்றின் விலை = ₹90

நான் வாங்கிய ஒரு ஆப்பிளின் விலை = $\frac{90}{6}$

$= \frac{\cancel{90}^{15}}{\cancel{6}_{1}}$ [ 6 - ஆல் வகுக்க ]

= **₹15**

**₹14** < **₹15**

> நண்பன் ஒரு ஆப்பிளை ₹14 -க்கு வாங்கியதால் அதுவே சிறப்பானது.

## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 8th March, 2022 :: 04:51 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

**V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.**
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**